# மணிப்புலவர் மருதூர்-ஏ-மஜீத் கவிதைகள்

# கோயில் மாடும் ஹோட்டல் பூனையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No: 894.8111 Acc.No: 21607

# Ameer Ali Public Library

Pradeshiya Sabha, Sammanthurai.

## NOTICE TO REFERENCE READERS

This book is to property of the Ameer Ali public library, and any unauthorised possession of it outside the regulation governing Reference facilities is a serious offence. Reference Readers are requested to adhere strictly to the rules and regulations relating to reference detailed in the Library handbook.

Reference Readers are kindly request to keep the books clean, and to refine from turning down leaves or making pencil or the marks upon them they will be held responsible for the condition of any book returned by them and they should, therefore, report any damage or other injury to the books to the library Assistant at the Counter before reference them.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21607 (R)

894.8111
மரு

CLASS NO. 894.8111
ACCESSION NO. 21607

REFERENCE SECTION
உசாத்துணைப் பகுதி

# கோயில் மாடும் ஹோட்டல் பூனையும்

AMIRALI PUBLIC LIBRARY
Pradeshiya Sabha
Sammanthurai

06 JUN 2008

வெளியீடு
மருதூர் வெளியீட்டுப் பணிமனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலந்தியின் நூலுக்கு
இந்நூல்
சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : கோயில் மாடும் ஹோட்டல் பூனையும் (கவிதைகள்)

முதற்பதிப்பு : 2017 டிசம்பர்

ISBN : 978-955-105811-1

© : மணிப்புலவர்
மருதூர் - ஏ - மஜீத் (J.P.)
B.A. Hons. S.L.E.A.S., PGDE
ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளர்,
வடக்கு கிழக்கு கலாச்சாரப் பணிப்பாளர்.

கணினி ஒழுங்கமைப்பு : எஸ். எல். அப்துல் ஹை
யூ டி எச் கம்பியூபிறின்ட்

வெளியிடுவோர் : மருதூர் வெளியீட்டுப்பணிமனை
436, பழைய சந்தை வீதி,
சாய்ந்தமருதூர் -03, கல்முனை,
சிறீலங்கா.
தொலைபேசி : 0775000660, 0672055105

அச்சிட்டோர் : யூ டி எச் கம்பியூபிறின்ட்
இல. 51/42, மொகிதீன் மஸ்ஜித் வீதி,
கொழும்பு 10.

விலை : 300.00

Heading : KOYEL MADUM HOTEL PUNAIUM (Poems)

ISBN : 978-955-105811-1

© : Al Haj Manippulavar Maruthur A. Majeed (J.P)
B.A. Hons. S.L.E.A.S., PGDE
Red. Director of Education, Director of Culture

Page Setting by : Al Haj S.L. Abdul Hai
UDH Compuprint

Published by : Maruthur Velieeddu Panimanai
436, Old Market Road, Sainthamaruthur - 03.
Kalmunai, Sri Lanka. 0775000660, 067 2051105

Printed by : UDH Compuprint
51/42, Mohideen Masjid Rd., Colombo 10.

Price : 300.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிக்குரியவர்கள்

சாய்ந்தமருதூர்
பழைய சந்தி வீதியைச் சேர்ந்த
முஹர்ரம் பஸ்மீர் அவர்களுக்கும்
கவிஞர் எஸ். றபீக்,
எழுத்தாளர் பறக்கத்துல்லாஹ் ,
கவிஞர் எஸ் . ஜனூஸ்,
கவிஞர் ஏ. பீர் முஹம்மது,
மேமன்கவி அப்துல் றஸாக்
கவிஞர் நவாஸ் சௌபி
ஆகியோருக்கு
வெளியீட்டுப் பணிமனையின்
நன்றிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்கு மூலம்

நான் இங்கு உரைப்பது உண்மை. உண்மையைத் தவிர வேறு எதுவுமில்லை. இது சத்தியம். என வழக்கு மன்றில் சத்தியம் செய்து வாக்கு மூலம் செய்வது போல இங்கும் நான் சில உண்மைகளை உண்மைக்கு உண்மையாக எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

எனது இந்தக் கவிதைத் தொகுதி

பகுதி ஒன்று : கடலில் வீசிய காற்று.

பகுதி இரண்டு : காற்றினால் கரை ஒதுங்கிய அலைகள்.

பகுதி மூன்று : ஒதுங்கிய அலைகளோடு கரை ஒதுங்கிய கிழிஞ்சல்கள்

பகுதி நான்கு : கரையில் இருந்து மீண்டும் ஆழ் கடல் சேர்ந்த அலைகள்

பகுதி ஐந்து : ஆவியாகிச் சென்ற அலைகள்

என ஐந்து பகுதிகளைக் கெண்டது.

என்றாலும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது. அறாது ஒழுகும் கண்ணீர் போல.

ஒரு நூலுக்கு வைப்பு முறை அவசியம், என்ற இலக்கணத்தை ஒட்டி இதனை பகுத்து வைப்புச் செய்துள்ளேன்.

கடலை இங்கு மையப்படுத்தியதற்குக் காரணம் கடலும் மனமும் ஒத்த தன்மைத்து என்பதால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி ஒன்று :

காதல் உணர்வோடும் உறவோடும் கூடிய கவிதைகள்.

பகுதி இரண்டு :

காதல் உணர்வைக் கடந்து கடமையுணர்வோடு கூடிய கவிதைகள்.

பகுதி மூன்று :

தென் கிழக்கின் கலை கலாச்சார பண்பாடுகளை பதிவு செய்யும் கவிதைகள்.

பகுதி நான்கு :

மூலத்தைத் தேடும் பரிசோதனைக் கவிதைகள்.

இந்த நான்காவது பகுதிக்கான கவிதைகள் என்னால் எழுதப்பட்டு பல வருடங்கள் கிசாளத்திலே கிடந்த கவிதைகள்.

இக்கவிதைகளை பரிசோதனைக் கவிதைகள் என்பேன்.

இக்கவிதைகள் மொழிச் சலவை செய்யப்பட்டு பஞ்ச பூதங்களின் உதவியோடு கஞ்சியிட்டு நிழலில் காயவிட்டு எடுத்து ஸ்திரிக்கை செய்து மடித்து கவிதை எனும் ஊடகப் பெட்டகத்தில் வைத்துள்ளேன்.

புரியாதவர்கள் ஒன்றிக்கு பல தடவை வாசித்து புரிந்து கொள்ள முயற்சியுங்கள்

பகுதி ஐந்து :

இதிலுள்ள கவிதைகள் இரங்கற் கவிதைகள்

"என் கவிதைகளும் கதைகளும் என் மன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உல்லாசத்திற்காக மட்டும் எழுதப்பட்டதல்ல.

இவைகள் மனித மனங்களுக்கு எருவாக அற்பணிக்கப்பட்டவைகள்" என்று எனது முதலாவது நூலான பன்னீர் வாசம் பரவுகிறது. எனும் சிறுகதைத் தொகுதி முன்னுரையில் வாக்குமூலம் அளித்துள்ளேன்.

நான் போட்டிகளில் கலந்து கொள்வதில்லை.

காரணம், எனக்குத் தோல்விகளை தாங்க முடியாது என்பது மட்டுமல்ல, மற்றவர்களை தோற்கடித்து அவர்களின் துன்பத்தில் இன்பம் காணவும் நான் விரும்புவதில்லை.

இதுவரை இருபது நூல்களை எழுதியுள்ளேன்.

எந்த நூலுக்கும் யாரிடமும் நான் அணிந்துரை பெற்றுக் கொள்ளவில்லை. அணிந்துரை எழுதுபவர்கள் அணிந்துரைக்கும் முன்னுரைக்கும் வித்தியாசம் விளங்காது இலக்கணம் புரியாது எழுதுகிறார்கள்.

அது மட்டுமல்லாமல் ஏனோ தானோ என்று புகழ்ந்து எழுதுகிறார்கள்.

அதுவும் அவர்களது கோஷ்டியை சேர்ந்தவர் என்றால் பூதக்கண்ணாடி வைத்து தேடியும் எதுவும் அந்நூலில் இல்லை என்றாலும் ஹோய் ... ஹோய் ... என்று புகழ்மாரி பொழிகிறார்கள்.

அதனால் அணிந்துரைகளை நான் தவிர்த்துக் கொண்டேன்.

அதுமட்டுமல்ல நான் கண்ணதாசனைப் போல, பட்டுக்கோட்டையாரைப் போல, மகா கவி பாரதியைப் போல, பாமரனுக்கும் பந்தி வைப்பவன். இது எனது கொள்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிலர் எழுதும் கவிதைகள் படைத்தவருக்கும் விளங்குவதில்லை, படிப்பவருக்கும் விளங்கு வதில்லை.

இதனை நான் பிழை என்று வாதிட வரவில்லை என்னை அப்படி விளங்காத கவிதைகளை எழுதத் தெரியாதவர் என்று வாசகர் மத்தியிலே கட்டவுட் போட்டு காட்ட விரும்புகிறார்கள்.

இதில் இருந்து என்னை பாதுகாத்துக் கொள்ளவே இத்தொகுதியில் பகுதி நான்கினை சேர்த்துக் கொண்டேன்.

மேலும் இக்கவிதை தொகுதியில் எனது 77 வது வயதில் எழுதப்பட்ட காதல் கவிதைகளும் உண்டு.

இதனைப்படித்த எனது நண்பர்களில் ஒரு சிலர் இந்த வயதில் இது தேவையா ? எனச் சிணுங்கிக் கொண்டனர்.

காதலுக்கு வயதுக் கட்டுப்பாடு கிடையாது.

கவிஞர்களான கண்ணதாசனும், வைர முத்துவும், வாலியும் இப்படி எழுதவில்லையா ?

நான் மட்டும் ஏன் இதற்கு விதிவிலக்காக வேண்டும்.

மேலும் இத் தொகுதியில்

தென் கிழக்கின் கலை, கலாச்சார பண்பாட்டுக் கோலங்களை பதிவு செய்துள்ளேன்.

இக்கவிதைகள் இறுக்கமாக இல்லை என்பதுவும் என் நண்பர்கள் ஒரு சிலரின் குற்றச்சாட்டு.

சினிமாப் பாடல்கள் இவ்வாறான தொய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட கவிதைகளே. அவைகளை இறுக்க மாக்கினால் இசையமைப்பிற்குள் உள்வாங்குவது கஷ்டமாகிவிடுவது ஒன்று.

மற்றது பட்டி தொட்டிகளிலும் வாழ்கின்ற சினிமா ரசிகர்களை அது ஏமாற்றிவிடும் என்பது மற்றொன்று.

எனது மூன்றாவது பகுதிக் க்விதகைளில் மண் வளச் சொற்கள் பல இடம் பெற வேண்டியேற்பட்டதால் இத்தொய்வு ஏற்படக் காரணம் எனலாம்.

இன்னும் இறுக்கினால் சாதாரண வாசகன் ஏமாற்றப்பட்டுவிடுவான் என்பதால் தவிர்த்துக் கொண்டேன்.

மற்றது

எனது நண்பர் கவிக்கோ அப்துல் றஹ்மான் அவர்கள் "நீங்கள் ஏன் சினிமாவுக்கு பாட்டு எழுதுவதில்லை" என்று கேட்டதற்கு அம்மி பொழிய சிற்பி தேவையில்லை என்று கூறிய கருத்திற்கு நான் உடன்பாடில்லை.

கவிக்கோ அவர்களின் பவள விழா சென்னையில் நடைபெற்ற போது இலங்கையில் இருந்து கவிதை வாசிக்க நானும் பேசுவதற்கு முஸ்லிம் காங்கிரசின் தேசியத் தலைவர் றவூப் ஹக்கீம் அவர்களும் அழைக்கப்பட்டிருந்தோம்.

அங்கு கவிதை வாசித்த இளங்கவிஞர் ஒருவர் "கவிக்கோ அவர்களே! நீங்கள் கிடந்த கற்களையெல்லாம் ஒன்றும் விடாமல் சிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து விட்டபடியால் நாங்கள் கற்கள் கிடைக்காமல் அம்மியைப் பொழிந்து கொண்டிருக்கிறோம்" என அடக்கத்தோடு கூறினார்.

இது எனக்கும் பிடித்திருந்தது

கவிதை என்பது

மலர் போல் விரித்து மணம் பரப்புவது


கவிதை என்பது

பிள்ளை போல் நோக்காட்டோடு பிறப்பது.

கவிதை என்பது

படிக்கப் படிக்க மீண்டும் மீண்டும் படிக்கத் தோன்றுவது,

ஒரு சொல்லும் கவிதையாகலாம் எனக் கூறுவதோடு உங்கள் ஆதரவு எனக்கு என்றும் இருக்கும் நம்பிக்கையோடு விடைபெறும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்கமும் பதிவும்


சமர்ப்பணம்

நூல் விபரம்

நன்றிக்குரியவர்கள்

வாக்குமூலம்

பகுதி 1 கடலில் வீசிய காற்று

பகுதி 2 காற்றில் கரை ஒதுங்கிய அலைகள்

பகுதி 3 அலைகளோடு கரையொதுங்கிய கிழிஞ்சல்கள்

பகுதி 4 மீண்டும் ஆழ்கடல் சேர்ந்த அலைகள்

பகுதி 5 ஆவியாகிச் சென்ற அலைகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி I

# கடலில் வீசிய காற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளீடு

- உரிசிப் பரம்பரை உங்க பரம்பரை
- எனக்குத் தெரியாது உன் இறப்பு நிகழாது
- சுண்ணாம்பு நாக்கை சுட்டது போல
- கல்லினுள் கசிந்த ஈரம்
- கரும்பும் எறும்பும்
- சீ - தனம் ஏதுக்கடி
- குட்டிகுறோ பவுடர்வாசம்
- பாலைவனப் பயணத்தில்
- தலைப்பில்லாக் (கன்னி) கவிதை
- பாலைவனத்திலும் பசுமை நினைவு
- அறு சுவையுள்ளே இருவகையின்பம்
- அடியே! தாக்கத்தி
- தனம் எத்தனை கனம்
- இளமையில் இஞ்சி முதுமையில் சுக்கு
- எதைக் காட்டினாலும் காட்டு
- சிற்றொழுங்கையில் சிதைந்த உறவு
- சேலைச் சொர்க்கத்தில் அடங்கியது என் மூச்சி
- சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி
- கல்யாணச் சந்தையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருசிப்பரம்பரை
## உங்க பரம்பரை

நீ
உப்பு மாங்காயை
தின்று விட்டு
உதட்டைச் சுருக்கி
நல்ல உருசி
எனும் போது
இலக்கணத்தில்
குற்றியலுகரம்
படித்த ஞாபகம்
வந்து போகுது.

நான்
ஓதும் பள்ளி
போகும் போது
எங்க மாமி
(உங்க) வீடு வந்து
❖ சாட்டிற்கு
தண்ணீர் கேட்பேன்
மாமி
❖ புகைத்தண்ணீர்
குடிக்கத் தந்து
வாசலில் காயும்
ஊறுகாய் தொட்டு
நாக்கில் வைத்து
உதடு கூட்டி
நல்ல உருசி
திண்டு பார்மன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கூறி
என்னிடம் தருவா
இத்தனை ஆண்டு
சென்ற பின்பும்
உங்கள் உம்மா
தங்க மாமி
உதடு கூட்டிச்
சொன்ன உருசி
உன்னிடம் காண்கிறேன்.
உருசிப்பரம்பரை
உங்க பரம்பரை
என்றே எண்ணி
இன்பம் காண்கிறேன்

❖ புகைத் தண்ணி : மட்குடத்துள் காலையில்
உமிப்புகையிட்டு
மாலையில்
எடுத்து அதற்குள் நீர்
நிரப்பிக் குடிப்பர். புகை
மணத்தோடு நல்ல
உரிசியாகவும் இருக்கும்
இதனை "புகைத் தண்ணி"
என்பர். இன்றும் சில
வீடுகளில் இப் பழக்கம்
உண்டு எனது மகள்
வீட்டில் இப்பழக்கம் இன்றும்
உண்டு

❖ சாட்டிற்கு : பொய்க்கு
அல்லது
தேவையில்லாமல்
என்பது பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குத் தெரியாமல்
# உன் இறப்பு நிகழாது

உன்
பூ வாய் மலர்ந்து புன்னகைத்து
கண்ணால் அம்பெய்து
எனை வீழ்த்தி
ஆனந்திப்பாய்
அது எனக்கும்
ஆனந்த மே.

உன்
பொல்லாத்தனமும்
பொங்கி எழும் கோபமும்
எல்லா நாளுமா?
இல்லையே
ஊடலாக
இருந்து போகட்டும் அது.

உன்
உண்டியில் கிடந்த
மயிர் மண், கல்
எப்படி மறக்க முடியும்
அதுவு மொரு
மறக்க முடியாத
மல்லாடல் தான்.

உன்
அழகு, ஆ! அற்புதம்
பலவர்ணக் கஞ்சான்தாளை
நறுக்கி எடுத்து
உயரத்தில் ஏறி நின்று
கொட்டிவிட அது
ஆடி அசைந்து விழும் அழகு
அது பொருந்தும் உனக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்
கன்னம், கண்கள்,
பல்லு, உதடு
இடுப்பின் துடுப்பாட்ட நளினம்
புரியாது தவிக்கும்
புலவன் நான்.

உன்
வயது அறுபது
என் வயது எழுபது
ஆசை வந்தது
இந்த வயதில்
இது தேவையா? என்பாய்
எப்போதும் என்பாவாய்
என்பேன்.

உன்
இறப்புச் செய்தியை
என்னிடம் கூறுமாறு
பேரப்பிள்ளைகளிடம் கூறிப்
படுத்துக் கொண்டாய்
பிறப்பு, இறப்பு
தெரியாத பருவம்
அப்படியே அவர்கள்
என்னிடம் கூறினார்கள்.

உன்
இறப்புச் செய்தி
பொய்யாக இருந்தாலும்
ஹக்கல பூந்தோட்டத்தில்
நெருப்பிட்டது போல்
இருந்தது எனக்கு.
எழுந்திரு
கண்திறவாய்
என் பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுண்ணாம்பு நாக்கை
## சுட்டது போல

ரோசாப்பூ மேனி
ஊதாப்பூக் கண்ணி
காதுப்பூ மின்ன
சிரிப் போடு வந்து
குழந்தை போல்
கதைப் பாள்
கேட்டது ரசிப்பேன்
எண்ணியது ஒளுப்பம் ❖
ஏங்கியதோ பல நாள்
சுண்ணாம்பு நாக்கை
சுட்டது போல் தவிப்பேன்.

துறவறம் நினைப் பேன்
அவள் கண்டு மறப்பேன்.
குரங்கு மனத்தில்
இடி மின்னல் காதலா ?

❖ ஒளுப்பம் : கொஞ்சம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லினுள் கசிந்த ஈரம்

ஆசைத் தீ
சுடர் விட
பூந் தோட்டத்தினூடே
அவள் வீடு நோக்கி
நடந்த போது
கிடந்த மலர்
மிதிபடப்பார்த்தது.

சுண்டி இழுத்தேன்
பக்கத்தில் கிடந்த
கல்லில் பட்டு
காலில் காயம்.

ஆசைத் தீ
அணைய
திரும்பி விட்டடேன்.

நல்ல காலம்
மனக் காயம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரும்பும் எறும்பும்

சங்க இலக்கியத்தை
நாம்
சங்கை செய்ய வேண்டும்.
களவொழுக்கம்
என்றானே அதற்காக.
உங்க அம்மா
தும்புக் கட்டால்
துடைத் தாளா?
அடித்தாளா?
மீண்டும் ஏன்
நினைத்தாய்.
கள்ளியே
நான்
உனை விரும்பும்
களவொழுக்கம் தெரிந்த
எறும்பு
நீ எனக்கு கரும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீ – தனம் ஏதுக்கடி

வண்ணமே, வடிவே - என்
எண்ணத்தில் வந்தமர்ந்த - இனிப்பே
புன்னகை போது மடி - உனக்கு
பொன்னகை ஏதுக்கடி.
கொடியே மலரே - உன்
கோடி எதற்கு - அது
கோடி கோடியாய் - உன்னிடம்
கொட்டிக் கிடக்குதடி.

சாம்பல் நிறமே - நீ
ஆம்பல் மலர் தான் - உன்
கூம்புத் தனம்
வம்புத்தனமோடி.

வண்ணமயிலே - பொற்
கிண்ணமே - என்
சீனத்துச் செப்பே - உன்
சீ - தனம் ஏதுக்கடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குட்டிகுறோ
## பவுடர் வாசம்

எனக்கு வயது 16
அவளுக்கு 13
உதக்காய் பருவம்.
பேரழகி
பெயரும் அழகிதான்.
தாவணி இல்லாத
பாவாடை சட்டை
ஓட்டமும் நடையுமாய்
கடைக்குப் போவாள்.
நான்
பாதை யோரப்
பார்வையாளன்
முறுவல் செய்வேன்
அது போல் அவளும்.

ஒரு நாள்
சின்ன நிலவு சிரித்தபடி
அருகேவந்ததும்
யானைப் பயில்வானாகி
கையை பிடித்தேன்
யாரும் கண்டா
மானம் போகும்
என்று கெஞ்சினாள்
விட்டதும்
'சொத்தட அசில'
என்று ஏசி கிள்ளிவிட்டு
துள்ளி ஓடினாள்.
மின் சாரம் தாக்கி
மீண்ட உணர்வு
கிள்ளிய எரிவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயமும் சேர்ந்த
கலவையினூடே
குட்டிகுறோ
பவுடர் வாசம்
நீண்டு நிலைத்தது.

ஆண்டு பல்லாண்டாய்
மீண்டு மெழுகின்ற
நீண்ட அலை போல - நெஞ்ச
கூண்டில் அவள் நினைவு.

அறுபது ஆண்டின்பின்
அழ கூர்வந்தேன்.
வந்ததும் வந்தது
அழகியின் நினைவு.
எப்படி இருக்கிறாள்
என்று அறிய
தேடியலைந்து
கண்டு கொண்டேன்.
அழகி கிழவியாகி
நெல்லுப் பாய்க்கு
காகம் துரத்த கம்போடு
காவலிருக்கிறாள்.
பழுத்துவிழுந்த
பெஷன்புறூட்
நாள் முழுவதும்
வெய்யிலில் கிடந்து
சுருங்கிய நிலை
அசந்து போய் திரும்பி விட்டேன்.
குட்டிகுரோ புவுடர் வாசம்
மூக்கைத் துளைத்தது.
இன்ப வேதனை
இறைவன் தண்டனையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலைவனப் பயணத்தில்

வயலின் பசுமை
வானத்தின் அழகு
குழந்தையின் சிரிப்பு
கூட்டுச் சேர்ந்த
எமது உறவை
இருவீட்டாரும்
ஏனோ விரும்பிலர்
அதனால்
வெள்ளாப்பில் விலகிய இருள் போல
பிரிந்தது உறவு

நீண்ட
பாலைவனப் பயணத்தில்
நிழல் தருவென
கணவன் அருகில்
கைக் குழந்தையொடு
உனைக் கண்டேன்
என் மனம் நெகிழ்ந்தது.
உன் முகம் மலர்ந்தது.
நொடிப் பொழுதில்
கோடி எண்ணம் வந்து போனது.
மறக்கவும் மன்னிக்கவும்
தெரிந்த எனக்கு
மனத்துள்
வாழ்த்தவும் தெரிந்தது
பயணத்தில்
நடக்கிறேனா பறக்கிறேனா
புரிய வில்லை
புதிய தொரு அனுபவம்
அது சுகா அனுபவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைப்பில்லாத (கன்னி) கவிதை

நெலூக்கா ..... பிறிட்டி ......
நினைக்கவும் அழைக்கவும்
உனக்கு
இரு பெயர்கள்.

நீ
விரல்களை
உன் கன்னத்தில் சேர்க்கும் போது
ஆ! அற்புதம்
சலவைக்கல்லில்
ஒட்டிய ஓக்கிட்.

சற்றே சரிந்த
உன் தனங்களை
பார்க்கும் போதெல்லாம்
நான்
சலீமாக மஜ்னூனாக.

உன் புன் முறுவல்முன்
மல்லிகை மட்டுமல்ல
அனைத்து மலரும் அடிமை.

உன் கொடியிடை
அசையும் போது
அல்லி தாமைரை
அனைத்துத் தண்டுகளும்
அசைந்து ஆடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ
ஆழ்ந்த சிந்தனையில்
இருக்கும் போது
அனைத்து ஞானிகளும் அவுட்.
முரளீதரன் பந்துவீச்சில்
அவுட்டாவது போல.

நீ
புரியாத புதிர்
எனக்கு மட்டுமல்ல
உனது
எதிர்காலக் கணவனுக்கும் தான்.

பெண்ணை
அவள் பெண்ணியத்தை
இரசிக்கத் தெரியாதவன்
பேயன் பெண்ணை பேயென்றுதான்
சொல்லுவான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலை வனத்திலும் பசுமை நினைவு

அரி நிலவு
சிணு சிணுத்த மழை
நனைந்தவாறு நான்.

தாவணியால்
தலை துடைத்து
முத்த மிட்டு
வரவேற்றாள்.

கொடுப்பால்
சிரித்து
இடுப்பால்
நடக்கும்
விருந்தோம்பல்.

நாய் குறைக்கிறது
நாசமத்த நாய்
திட்டுகிறாள்.
அவள் தோளை
தட்டுகிறேன்.

பாலைவனத்திலும்
இந்தப் பசுமை
நினைவுக ளோடு
பல்லாண்டு
வேலை செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறுசுவையுள்ளே இருவகையின்பம்

உடன் முறித்து
உப்பிட்டவித்த
சோளக்கதிர் சுவை
அவள் இதழ்கள்

பால் நிறப் பற்கள்
தாம்பூலம் தரித்து
கராம்பு நிறமும் சுவையும்.

தயிர் மேல் படர்
ஆடைபோல
மிளிரும் கன்னம்.
ஆடைநிறமும்
அதன் சுவையும்.

பட படக்கும் இமைக்குள்
குண்டுமணி
அங்குமிங்கும் புரழ்கிறது.
மூக்கால் எடுக்கும்
முயற்சி தோல்வி.
நுரப்பழ வாசமும் சுவையும்.

கண்டத்தின் மேல்
நாற் சுவை.
கண்டத்தின் கீழ்
பாற்சுவை, தேன் சுவை.
மொத்தத்தில் அறு சுவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவைகளின் நினைவால்
கொஞ்ச நேரமிதப்பு,
ஆழ்கடல் தவிப்பு
மனதிலே களைப்பு

உடல்
உருக்குலைந்த நிலை
பார்த் தோர்
(காதல்) பைத்தியம் என்றனர்
மேதைக்கு சிற்றின்பம்
பேதைகளுக்கு பேரின்பம்
பெரிய, சிறிய
இன்பப் பகுப்பு
புரியாது தொடரும்
மானிடர் தவிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடியே!
## தாக் கத்தி

அடியே ! தாக்கத்தி
ஏன் என்னை பூக் கொத்தி
அரிந்து அக்குளுக்குள்
அடிக்கிக் கொண்டாய்
எனக்கு அக்குளுக்குத்துகிறது!

அடியே! மூக்குத்தி
எனை கல்லில் அடித்து அடித்து
சலவை செய்யாதே.

அடியே! வேர் கொத்தி
எனை
அக்குளில் இருந்து எடுத்து
இடுப்பில்
அப்பிள் பழ
பொக்குளுக்கு அருகே
சொருகிக் கொண்டாய்
உன் பொக்குளை
சின்னி விரலால்
தடவினேன் இன்பவேதனை
ஆ !
அவலும் சர்க்கரையும்
பிசைந்து தின்ற சுவை.

அடியே! அறக் கொத்தி
நான் சாவ தென்றாலும்
இன்ப வேதனையோடு
உன் பொக்குள் அருகேதான்
சாக விரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனம் எத்தனை கனம்

ஒரு கணம் பிரமித்துப் போனேன்,
தனம் என்ற சொல்லை
தந்தவனை நினைத்து.

புள்ளி வைத்து
கிள்ளி வைத்து
அள்ளி வைத்த
தனராஜ்யங்கள்
இல்லை யென்றால்
பிள்ளைச் செல்வம்
வற்றிப் போகும்
தாய்மையும்
தரைதட்டிப் போகும்
இறைவனின் கருணையை
எண்ணி மகிழ்வோம்.

ஆசைக்குதவா அல்குல்
ஆபத்திற்குதவா ஆண்மை
தேவைக்குதவா காசு
திசைக்குதவா முள்ளு
இருந்தும் என்ன பயன்.

காத்தாடி போல்
இடையாடிவர
பார்த்தாடிப் போனேன்.
வேர்த்தாடியது உடல்
கூத்தாடியது ஆசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமையில் இஞ்சி
# முதுமையில் சுக்கு

மண் புட்டு
சாம்பல் அப்பம்
சுட்டு விளையாடிய
உனைக் கண்டு
விரும்பினேன்
இணைந்து கொண்டோம்.

முருங்கை காயும்
வரால் கருவாடும்
கறிக்கு இணங்கியது போல்
அமைந்தது வாழ்வு

அறுபதிலும்
இளைமைத் தோற்றம்
இஞ்சி சுக்காய்
ஆன பின்பும்
மருத்துவக் குணம்
மாறாதது போல.

இறையருள் இது
இறைஞ்சுவோம் அவனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதைக்
## காட்டினாலும் காட்டு

பேய்க் காற்றுடன் நெருப்பு மழை
சாக்காட்டில் நான்.
அதற்குளொரு
நப்பாசை.

நீ
ஆக்காட்டு
உன் பூக்காட்டு
வாசம் நுகர
இல்லையேல்
பேய் காட்டு.
அல்லது
சோக்காட்டு.

முள்ளுக் கள்ளியே
உன் சோக்காட்டை
பார்த்துப் பார்த்து
சோர்ந்து விட்டேன்.
மூச்சுத் திணறுதடி.
அதற்கிடையில்

எதையாயினும் காட்டு
பார்த்து விட்டுச் சாகிறேன்.
வேக்காட்டோடு
உனை தொட்ட பழி தீர.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்றொழுங்கையில்
# சிதைந்த உறவு

உச்சி வேளை
சிற்றொழுங்கையில்
பேய்கூட வராத வேளையில்
நீயும் நானும்.
நமக்கென முன்னோர்
ஒழுங்கு செய்த
ஒழுங்கையென்பேன்
நீ சிரித்தபடி
கற்பனைக்கு
பஞ்சமில்லை என்பாய்.
கல்யாணத்தையும்
இங்கேயே வைப்போம் என்றதும்,
யாரும் கண்டால்
மானம் போகும்
என்றே நீ ஓடி விட்டாய்.
அடுத்தநாள்
ஒழுங்கை
வெறிச்சோடிக் கிடந்தது.
உன் சகோதரன் தடியன்
தடியோடு நின்றான்.
ஒழுங்கையை
மறந்தேன்.
மறக்காது
உனை வாழ்த்த
வார்த்தை தேடினேன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்க வில்லை.
மறக்க முடியாத
வடுக்களை
தந்து விட்டுச் சென்ற உனை,
சுனாமி வந்து போன பின்பும்
நீண்டு நிலைக்கின்ற
எமதூர் கடற்கரை
மணல் போல
நீண்டு நிலைக்க
வாழ்த்தினேன்.
யாருக்கும் எதுவும்
சொந்தமில்லை.
நினைப்பதெல்லாம்
நடப்பதில்லை.
எனச் சொல்லி
மீண்ட சுனாமிக்கும்
நன்றி கூறினேன்.
எட்டாப் பழம்
புளிக்குமென்ற
கருக்தாடல் அல்ல இது.
உன்னை மனந்திறந்து
வாழ்த்தும் வாழ்த்தாடல் இது
நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேலைச் சொர்க்கத்தில் அடங்கியது என் மூச்சு

சேலைச் சொர்க்கமே
செந்தமிழ் அரங்கமே
பாலைவன சுனையே
பார் போற்றும் காவியமே
பகலெல்லாம் உன் நினைவு
இரவெல்லாம் உன் கனவு
கூர்மூக்கு உந்தனுக்கு
குறுங் காயம் எந்தனுக்கு
முழுநாளும் உனதாட்சி
அடங்கியதே என் மூச்சு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்க்கரை பந்தலில்
## தேன்மாரி

மாலை வெள்ளி,
தோற்றத்தில் முள்ளி,
நிம்மதிக்கோ கொள்ளி,
வைத்தாளே கள்ளி.

வெற்றிலைக் கொடி போல்
விரும்பிய தழுவல்
கைகள் பட்டு
பளபளத்தது மேனி.

தட்டிவைத்த
தங்கத் தட்டில்
வெட்டி வைத்த
வைரக்கற்கள்
கொட்டி கிடந்தது
என் நெஞ்சக் கூட்டில்.

கிள்ளிப் பர்த்தேன்
உணர்வேயில்லை
அள்ளிப் பார்த்தேன்
வரவேயில்லை
தள்ளிப் பார்த்தேன்
அசைவேயில்லை
கள்ளி என்றேன்
பொய்யிலை என்றே
துள்ளி ஓடினாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலியாணச் சந்தையில்

கலியாணச் சந்தையில்
கொழுத்த
சீ - தனத்தோடு
அவள்.

அதே சந்தையில்
பட்டதாரியான
அவனும்.

பல்லும்
குடும்ப அசிங்கமும்
மிதந்து தெரிந்தது
அவளிடம்.

பல்லை இழுத்தும்
அசிங்கத்தை மூடியும்
பணத்தால் மறைக்கலாம்
முடிவெடுத்தான்,
முடிப்பதாக அவன்

ஆணுடமை சமூகத்தை
அடக்கவும்
அசிங்கத்தை மறைக்கவும்
சீ - தனம் உதவும்
சில பெண்களுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி II

# காற்றில் கரை ஒதுங்கிய அலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளீடு


❖ கோயில் மாடும் ஹோட்டல் பூனையும்
❖ ஏனோ தெரியாது எனக்கொரு விருப்பம்
❖ பூனையே நீ புரியாது போகிறாய்
❖ இதுதான் கோல்பேசா
❖ விடியலின் போதுதான் விபரம் தெரிந்தது
❖ கவிஞன் என்றால் நீ கல்லாய் இருக்க வேண்டும்
❖ கருணையே இல்லாத கறையான்களே
❖ பூனைபோல் மனிதர்களால் தூங்க முடிகிறதா?
❖ நானும் எனது சித்தாந்தங்களும்
❖ வேதவாக்கு உண்மையாக
❖ பசியைப் பறக்கடித்த பொளஸ்கறி
❖ மாற்றமும் மாறாமையும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில் மாடும்
# ஹோட்டல் பூனையும்

அவனது
விடா முயற்சியின்
வெற்றிச் சின்னமே
அந்த
ஐந்து நட்சத்திர
எவகிறீன் ஹோட்டல்.

ஹோட்டலைப் போல
அங்கு வளர்ந்த
அவனது பூனையும்
கொழு கொழுவென்று
பசுமையாக
பார்க்கத் தெரிந்தது.

காலம் பகைக்க
மாற்றான் கைக்கு
எவகிறீன்
மாறிய போது
வறியவனாக
வெளியே போனான்.

போகும் போது
வளர்த்த பூனையை
அழைத்துச் செல்ல
நினைத்து நெருங்க
சொகுசு வாழ்க்கை
நினைத்துப் பூனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி ஒழித்தது.
முருகன் கோயில்
அருகே படுக்கும்
அந்த மாடு
கோயிலுக்குரியது

விடா முயற்சி
எதுவுமின்றி
மாட்டின் சீவியம்
சீராய்ச் சென்றது.

வேலை இன்றி
தண்டச் சோறு
தின்று திரிவோர்
கோயில் மாடென
குறி சுடப்பட்டனர்.

மாடு இதனைக்
கேட்க நேர்ந்தால்
வடக்குத் தெற்காய்
தலையை ஆட்டி
ஆமா சாமி போட்டு நிற்கும்
எதிர்த்து நின்றால்
ஏதும் ஆகா
என்பதற்கு
நன்கு தெரியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனோ தெரியாது
# எனக்கொரு விருப்பம்

பனியில் மழையில் நனைதலும்
சீறிப் பாயும் கடலலையில்
அள்ளுண்டு போதலும்,

முட்டுக்காய் பருவ மங்கை யொருத்தியின்
சண்டித்தனத்தை ஓரமாயிருந்து
பார்த்து ரசித்தலும்,

உள்ளங்கையில் சீனி எடுத்து
நாக்கை நீட்டி நக்கி, நக்கி
"இச்சா" என்னலும்,

கிராமத்தான் கடையின்
வாங்கில் இருந்து
தேநீரில் பிஸ்கட்
தொட்டுத் தின்னலும்,

ஒற்றை மாட்டு
கூட்டுக் கரத்தையில்
அவளும் நானும்
சம்மாந்துறை
சென்று திரும்பலும்,
அரையில் மட்டும்
ஆடையோடலையும்
குறவர், வேடர்
கூட்டுச் சேர்வதும்,

ஏனோ தெரியாது
எனக்கொரு விருப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனையே நீ புரியாது போகிறாய்

யானையே வந்தாலும்
அசையாத என் உள்ளத்தை
பூனையே நீ
புரியாது போகிறாய்.
உன் குறுக்கறுப்பு
எனக்கில்லை பொறுப்பு.
கால் தூசி என்ற நினைப்பு.
பூனையே! நீ
புரியாது போகிறாய்
யானையே வந்தாலும்
அசையாத என் உள்ளத்தை
பூனையே! நீ
புரியாது போகிறாய்

கறுத்தப் பூனையே
உன் குறுக்கறுப்பு
கண்டு நான்
திரும்ப மாட்டேன்.
முன் வைத்த காலை
பின் வையாத் தன்மை
உனக்குண்டு
அதுபோல்
எனக்குமுண்டு
புரிந்து கொள்
பூனையே! நீ
புரியாது போகிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது தான்
## கோல் பேசா?

கச்சைக்கு பஞ்சமா?
தளிசையில் வெட்டிவைத்த
தயிராட்டம் அசைகிறது.

கூர்போட்ட கம்போடு
குத்துதற்கு வந்தவளாய்
அலைகிறாள் அங்கொருத்தி.

திராட்சை, தேசிக்காய்
அப்பிள் குரும்பையென
வந்து போகும்
பெண்கள் பலரங்கு.

குடையின் கீழ்
குடும்ப ஒத்திகையா?
முகங்கள் தெரியவில்லை
கால்கள் தெரிகிறது
என்ன நடக்கிறது
எதுவுமே புரியவில்லை.

கடலலையில்
கால்கழுவ
பாவாடைதூக்கி
இருவர்குத்தாட்டம்
அதைப் பார்க்க ஐம்பது பேர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலன் மடியை
கட்டிலாக்கி
கண்மூடித் தூங்குமவள்
நாலாம் மாடி
நிலாமுற்றத்தில்
தூங்கும் நினைவுகளோடு.

தாகம் தீர்க்க
தண்ணீரில்லை
வெய்யிலுக்கு ஒதுங்க
மரநிழலோ மிகக் குறைவு
கடலை இறால் வடைக்கு
தேவை
ஒரு நாள் உழைப்பு.

இது தான் கோல் பேஸா
சின்ன மகள் கேட்டாள்.
பெரிய மகள் தலை குனிந்தாள்.
காற்று கடுமை
புயலாய் வீசியும்
வேர்த்துப் போனேன்
வீண் வம்பை
விலை கொடுத்து வாங்கிவிட்டேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலின் போதுதான் விபரம் தெரிந்தது

ஆடுமாடு
அனைத்து உயிரும்
மாண்பு கொண்டதே.
என்ற உண்மை
புத்தன் என்ற
விடியலின் போதுதான்
புரிய முடிந்தது.

ஊசியின் காதினுள்
ஒட்டகம் புகுந்தாலும்
பணத்திமிர் கொண்டவர்
சொர்க்கம் புகாதது
இயேசு எனும்
விடியலின் போதுதான்
தெளிவாய்த் தெரிந்தது.

அரேபியாவின்
அஞ்ஞான இருளில்
சிலைகள் கடவுளாயின
முகம்மது எனும்
விடியலின் போதுதான்
அவைகள்
வெறும் கற்கள் என்ற
விபரம் புரிந்தது.

சொர்க்கத்தைத் தேடி
அலைந்த மானிடம்
முகம்மது எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடியலின் போதுதான்
தாயின் காலடி
சொர்க்கம் என
கண்டு கொண்டது.

ஏழையாய்
ஆக்கப்படுகிறார்கள்
பிறப்பதில்லை
என்ற உண்மை
கால்மார்க்ஸ் என்ற
விடியலின் போதுதான்
தெரிய வந்தது.

துவக்கும் தோட்டாவும்
பீரங்கி பெரியகுண்டும்
ஆனானப்பட்ட
அதிரடிப்படையும்
கால் தூசு என்பதை
அஹிம்சைப் போராளி
காந்தி எனும்
விடியலின் போதுதான்
ஐரோப்பிய மக்களால்
அறிய முடிந்தது.

இந்திய மண்ணொடு
இணைந்து கிடந்த
பாகிஸ்தான் எனும்
இஸ்லாமிய பூமியை
ஜின்னாஹ் எனும்
விடியலின் போதுதான்
அத்தேச மக்களால்
அறிய முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞன் என்றால் நீ கல்லாயிருக்க வேண்டும்

நீ
படிக்கல்லாயிரு.
பல்கலைக்கழகத்திலும் இருப்பாய்
கவிஞர் தாகூரைப் போல.

நீ
மைல் கல்லாயிரு.
பயணிக்க உதவுவாய்
இளங்கோவைப் போல.

நீ
பளிங்குக் கல்லானால்
தாஜ்மஹால் ஆவாய்.
கவிஞர் சேக்ஸ்பிர் போல.

நீ
சலவைக்கல்லாயிருந்து
கறை போக்கு.
வள்ளுவனைப் போல.

நீ
மூலைக்கல்லாயிரு.
முடங்காதிருக்கும்
அல்லாமா இக்பால் போல.

நீ
வணங்கும் கல்லாயிரு.
செதுக்கப்பட்டு

21607



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பர், சுந்தரர் ஆவாய்.
நீ
கருங்கல்லாயிரு.
கொள்கையில்
பாரசீகத்து பிர்தௌஸ் போல.

நீ
அம்மிக்கல்லாயிரு.
அரைக்க அரைக்க உசும்பாத
உமர் கையாம் போல.

நீ
எல்லைக்கல்லாயிரு.
ஏகப்பட்ட பிரச்சினை தீரும்
நஸ்றுல் இஸ்லாம் போல.

நீ
உரைகல்லாயிரு
அசலையும் நகலையும் காட்டிய
இமாம் றூமி போல.

நீ
உடைக்கும் கல்லாயிரு.
தேங்காயும் வெளிச்சம் காட்டும்
பாரதியைப் போல.

நீ
நடு கல்லாயிரு.
அடங்குமிடத்திலும் இருப்பாய்
பட்டணத்தார் போல.

நீ
தராசுக்கல்லாயிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியை எடுத்தோது.
உமறுப் புலவரைப் போல.
நீ
செங்கல்லானாலும்
செங்கோட்டையாகு.
கவிஞர் காளிதாசனைப் போல.

நீ
மாணிக்கக் கல்லாயிரு.
புகழப்படுவாய்
புகளேந்தி போல.

நீ
விசக்கல்லாயிரு.
அடங்குவர் அரசியலார்
அவ்வைக்கு அடங்கியது போல.

நீ
எறியும் கல்லாகு.
அனேகரை வீழ்த்திய
கம்பனைப் போல.

நீ
சக்தி முக்தி கல்லாகு.
உன்னுள் ஒளி காண்பர்
தீர்க்க தரிசன கவிஞனாவாய்.

நீ
எரி கல்லாயிராதே.
வருவது தெரியும் போவது தெரியாது
உலகில் இப்படி பல பேர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருணையே இல்லாத கறையான்களே

எனது நூல்களை இரவல் கொடுத்து
இழக்கமாட்டேன்.
என எழுதி ஒட்டிவைத்து கட்டிக்காத்த
காந்தி சுயசரிதம்
அர்த்த சாத்திரங்கள்
எட்டுத் தொகை பத்துப் பாட்டு
அகநானூறு புறநானூறு
எனப் பல நூறு
அருமந்த நூல்களை
இரண்டே நாளில் தின்று தீர்த்த
கறையான்களே!
இரக்கமே இல்லையா?
உங்களுக்கு

யூதர்களை அழித்த
ஹிட்லர் கூட நூல்கள் மீது
இரக்கம் காட்டினான்
அவனை விட மோசம் நீங்கள்.

மக்கள்
உங்களை எரித்த போது
அனுதாபப் பட்டேன் - உன்
புற்றைப் பார்த்து ஆச்சரியப் பட்டேன்
அப்படிப்பட்ட எனக்கு இப்படியா?
நூல்களை எரிப்போரும்
தின்ன அரிப் போரும்
அட்டுழியக் காரரே அவர்களை
அழிப்பது பாவமல்ல
இது வேதவாக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனைபோல் மனிதர்களால் தூங்க முடிகிறதா?

எத்தனை பெரிய உலகு
அதில்
எத்தனை சிறிய மனங்கள்.
அந்தப் பூனை போல் அமைதியாக
மனிதர்களால் தூங்க முடிகிறதா?

இந்தியாவில் ராமர் சண்டை
இலங்கையில் மொழிச் சண்டை
ஆபிரிக்காவில் நிறச் சண்டை
சவூதியில், ஈரானில் அரசியல் சண்டை
அந்தப் பூனை போல்
அமைதியாக
மனிதர்களால் தூங்கமுடிகிறதா?

அணு உலைச் சண்டை
மதச் சண்டை, மாக்சியச் சண்டை
எத்தனை சண்டை
அந்தப் பூனை போல்
அமைதியாக
மனிதர்களால் தூங்க முடிகிறதா?

தூங்கி எழுந்ததும் காலை நீட்டி
முதுகை முன் வளைத்து
சோம்பல் முறித்து
கவலை இன்றி
அணி நடைபோடும் - அந்த பூனை போல
மனிதனால்
தூங்கி எழ முடிகிறாதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் எனது சித்தாந்தங்களும்

இலக்கணம் படித்தவன்
தலைக்கனம் எனக்கு இல்லை.
காரிகை கற்று
கவிபாடுவதைவிட
பேரிகை கொட்டி
பிழைப்பது மேல்
இது எனது
இலக்கண சித்தாந்தம்.

நவீனத்துவம், பின் நவீனத்துவம்
மரபு வசனம் என
கவிதை ஊடகம் பற்றி
பேசுகிறோம்
கவிதைபற்றிப் பேச வேண்டும்.
கவிதை
குழந்தை போல பிறப்பது
மலர் போல விரிவது
கவிதை வேறு செய்யுள் வேறு
செய்யுளில் கூறப் படுவது
கவிதையாகி விடாது.
பாடலாசிரியர் பாடகர்
கவிஞர், புலவலர் என்பன
வேறு வேறு சொற்கள்
அர்த்தமும் வேறுதான்
அர்த்தம் புரியாது
அழைத்துப் பழகிவிட்டோம்.
உண்மை அடித்தளம்
கோட்டை கற்பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகைக் கோட்டையில்
அள்ளிப் பூசலே
கவிதை இலக்கியம்.
பொய் வேறு கற்பனை வேறு
பொய்யிலே பிறந்து
பொய்யிலே வளர்ந்த
புலவனா நான்?
வார்த்தை தேர்ந்து
ஆய்ந்து பார்த்து
அழகாய் அதனை
அணிகலன் ஆக்குவேன்
இது எனது
கவிதைச் சிந்தாந்தம்.

இயல், இசை, நாடகம்
முத்தமிழோடு
அறிவியலும் சேர்ந்து
நாற்றமிழாக வேண்டும்
அத்தோடு
எழுத்து சொல் பொருள், யாப்பு
அனைத்திலும் மாற்றம் வேண்டும்.
இது எனது
மொழி இலக்கியச் சித்தாந்தம்

பயத்தினாலும் பக்திவரும்
பக்தியினாலும் பயம்வரும்
இரண்டிலும் பின்னையதே
சிறப்புடைத்து
எல்லாமே வணக்கமாக
எல்லாமே உனதாகும்
இது எனது
மதவழிச்சித்தாந்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதவாக்கு
## உண்மையாக

அவர்களால்
கல்லின் மேல்
கல்லை வைத்து
கட்ட முடியாது
என பைபிளும்,

நாடின்றி அலைய
நானிட்ட சாபம்
என அல்குர்ஆனும்
அறிதியிட்டு
உறுதி கூறியும்,

இஸ்ரவேல் நாடு
எப்படி உருவானது?

உருவான அன்றே
உருவான சண்டை
ஓயவே இல்லை.

வேத வாக்கு
உண்மையாக
காலம் எடுக்கலாம்
நமக்கு அவசரம்
எதற்கு அவசரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசியைப் பறக்கடித்த பொலஸ்கறி

உச்சி வெய்யிலை
தாங்காத உடல்,
பசி எடுத்தது
உணவகம் சென்றேன்.

பரிமாறியிடம்
"இது என்ன" என்றேன்
"பொலஸ்கறி" என்றான்.

மனத்திரையில்
பலா, பழம், சுவை, மணம்
அதனோடு
பிஞ்சுப் பலாக்காய்
வெட்டி, குத்தி, குதறி
உருக்குலைய வைத்த
பொலஸ் கறியுடன்
பிஞ்சுக் குழந்தை
வல்லுறவுக்குட்படுத்தி
உருக்குலைய வைத்து
வெட்டி, குத்தி, கொலை செய்த
பாதகச் செயல் பற்றிய
பத்திரிகைச் செய்தி
ஞாபகம் வந்தது.
பசி பறந்தது
வெளியேறி விட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றமும்
# மாறாமையும்

தழுவலில்
அவள் நெற்றிப் பொட்டு
அவன் நெற்றிக்கு மாறியது
துடைத்தபின்
நமிதா, ஆமிதாவானாள்
ஓர் எழுத்தின் மாற்றம்
உடையில், உடலில்,
உணர்வில்,
வேத உச்சரிப்பில்
என
எத்தனை மாற்றங்கள்.
ஆனால்
இனச் சண்டை - மொழிச்சண்டை
மதச்சண்டை
இன்னும்
மாறவே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி III

## அலைகளோடு கரை ஒதுங்கிய கிழிஞ்சல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளீடு

- ஒழுப்பம் போல உறவைத் தேடல்
- நாலுவேளைச் சோறு பஞ்சமில்லாத ஊரு
- தென்கிழக்கில் கணவனை அழைக்கும் மரபு
- பாட்டுக்கு பஞ்சம் எங்கள் பரம்பரைக்கே கிடையாது
- தென்கிழக்கில் பெண்கள் குழந்தைகளை அழைக்கும் அழகு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒளுப்பம் போல
## உறவைத் தேடல்

- ❖ ஒளுப்பம்,
- ❖ மண்போல,
- ❖ சொட்டுப்போல,
- ❖ கிண்ணியாம் போல, (கிள்ளி-அம்-போல)

இது எமதூரின்
மண்வளச் சொற்கள்.
இவைகளை,
அடுத்த ஊர் அடிகளாரும்
ஆதரித்துள்ளார்.
அதனால்
அவர் பாணியில்
இருஊர் உறவினையும்
ஒளுப்பம்
எடுத்துரைத்தலே
இக்கவிதை.

விபுலானந்த அடிகளார்
வீட்டைவிட்டு
வெளியேவந்தால்
சாமி எங்குபயணமோ?
ஊரார் கேட்பர்.
மருதூர் மளிகை கடைக்கு
என்பார் அடிகளார்.
இதன் திரபே
மாளிகைக் காடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து
இனஉறவை
மண் போல
நினைத்து பார்ப்போம்

காரைதீவு
கண்ணகி அம்மன் கோயில் அருகே
❖ சுமைதாங்கியும்
❖ தண்ணீர்ப் பந்தலும்
இருந்தன.

மாட்டுப் பொளை வயலில் இருந்து
சுமந்து வந்த
நெல்லு மூடையை
சுமைதாங்கியில் இறைக்கி வைத்து
தண்ணீர் பந்தலில் தாகம் தீர்த்து
கோயில் முட்டியில் காணிக்கையிட்டு
புறப்படுவான்
மருதூர் முகம்மது தம்பி.

அங்காலக் காக்காட
தைக்காச் சந்தி
தேநீர் கடையில்
அதிகாலை
அப்பமும் தேநீரும்
அருந்தி உண்டு
தைக்காப் பள்ளியில்
காணிக்கை போட்டு
பஸ் ஏறி
மட்டு ஆஸ்பத்திரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் வருவான்
காரைதீவு கந்தசாமி
இந்த உறவு எங்கு போனதோ?
சொட்டுப் போல தேடி எடுத்தலே
இன்றைய தேவை.

❖ சுமைதாங்கி:- பாரத்தை இறக்கிவைக்கும் கல் தண்ணீர்பந்தல்:- தாகம் தீர்க்கும் மண்குடம் இன்று இவைகள் தென்கிழக்கில் பாவனையில் இல்லை

❖ ஒளுப்பம், மண்போல, சொட்டுப் போல கிண்ணியாம் போல போன்ற சொற்கள் தென்கிழக்கில் மிகச்சிறிய கொஞ்சம் என்பதை குறிக்கும் மண்வளச் சொற்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாலு வேளைச் சோறு
## பஞ்சமேயில்லாத ஊரு

ஆரம்பத்தில் ஊர்
பின் இது மருதூர்
இதற்கு
கல்முனை மருதமுனை
நற்பெட்டிமுனை வீரமுனை
சொறிக் கல்முனை என
அழகான
ஐந்து முனைகள்.

ஒரு வேளைச்
சோறு கிடைப்பதே
அரிதான காலத்தில்
மூன்று வேளையல்ல
நான்கு வேளையும் சோறு
இந்த ஊர்களில்.

காலையில் வெங்காயம்
பச்சை கொச்சிக்காய்
போட்டுப் பிசைந்து
கருவாடு சுட்டு
அதனோடு சேர்த்து
சாப்பிடும் சோறு
தண்ணீர்ச் சோறு.

வேளை தவறாது
வேலைக்கு போகும் விவசாயி
பகல் சாப்பிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமுகம் பட்டையில்
சோற்றோடு
பயற்றங்காய் சுண்டலும்
முட்டைப் பொரியலும்
இறைச்சி வறுவலும்
இனிதே வைத்து
இனியாள் கட்டிக் கொடுக்க
எடுத்துச் சொல்லும் பகற்சோறு
கட்டுச் சோறு அல்லது
பட்டைச் சோறு.

விளையாடிக் களைத்து
வீடுவரும்
பிள்ளைக்கு
தாய் கொடுக்கும் சோறு
இடைப் பகல் சோறு.

இரவானதும்
குடும்பமே சேர்ந்து
சாப்பிடும் சோறு
இராச்சோறு.

நாலு வேளைச் சோற்றோடு
இடையிடையே மாட்டிறைச்சி
கொண்டோடிப் புளியோடு
கலியாணச் சோறு.

எங்களுரில்
ஆண் பெண் கலியாணம் மட்டுமா
இல்லை இல்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரஞ்செடி கொடிகளுக்கும்
கலியாணம்.
தென்னை பாளை தள்ளினால்
கமுகு பூத்துக் காய்த்தால்
பிள்ளைகள் ஓதி முடித்தால்
வாப்பாவோடு மகன்
முதன்முதல்
வயல் வேலைக்கு போய்வந்தால்
பட்டக் கலியாணம்
இதற்கு வழங்கும் சோறு
பட்டக்கலியாணச் சோறு.

ஆண்பிள்ளைகளின்
கத்னாச்சடங்குச் சோறு.

கதிர் வெட்டி
சூடடித்து வீடுவந்த
நெல்லின் அரிசியை
ஆக்கி ருசிக்கும் புதிய சோறு
புதிர்ச் சோறு.

மூன்றிற்கு ஏழிற்கு
நாற்பதிற்கு என
ஓதித் தின்னும் சோறு
கத்தச் சோறு.

குழந்தைகள் சரியாகப் பேச
எழுத வாசிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்த்திவைத்து
கொடுக்கும் சோறு
நிய்யத்துச் சோறு.
வெள்ளி தோறும்
கோழிக்கறியொடு
மஞ்சள் சோறு
இதற்குப் பெயர்
புரியாணிச் சோறு.

இடையிடையே
நெய்ச் சோறு
இதற்குப் பெயர்
கந்தூரிச் சோறு.

பெண் குழந்தைகள்
சோறு கறி
ஆக்கிப் பழக
குறு நெல் சோறு.

இப்படி
வெள்ளை மஞ்சள்
சோற்றுடன்

குறு நெல் சோறு
கத்தச் சோறு
கலியாணச் சோறு
கட்டுச் சோறு என
நாலு வேளைச்
சோற்றுக்கப்பாலும் பல சோறு
சோற்றுப் பஞ்சம்
எங்களுரில்
சொல்லிலும் கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்கில் கணவனை அழைக்கும் மரபு

திருமணத்திற்கு முன்
மாமிர மகன்
எங்க மச்சான்
என
வாய்க்குள் முணுமுணுத்து
கேட்டுக் கிடக்கிற
மாப்பிள்ளை என
வெளியே சொல்லும்
மரபு
எங்களுரில்
இன்றும் உண்டு.

முடித்த புதிதில்
அவக என
மரியாதை யோடழைத்து
நாட்கள் நகர
எங்கட
வீட்டுக் காரர்
என
உரிமையோடு
அன்பைப் பங்குபோடும்
மரபு
எங்களுரில்
இன்றும் உண்டு.

நாட்கள் வருடமாகி
வருடத்திற் கொன்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை பிறக்க
வீட்டுக் காரர்
தம்பிர வாப்பா
ஆகி
அக்கம் பக்கம்
சேர்ந்தார் இனத்தார்
பிள்ளைகள்
பெயரைச் சொல்லி
ஹனிபாட வாப்பா
என அழைக்கும்
மரபு
எங்களூரில்
இன்றும் உண்டு.

பிள்ளைகளுக்கு
வயது ஆக
வாப்பாவுக்கு
வயது போக
பிள்ளைகள்
இல்லறத்தில் இணைந்து
பேரப் பிள்ளைகள் பிறந்திட
மூத்தவாப்பா
ஆகிய அவரை
அவரது மனைவி
எங்கட மனுசன்
என அழைத்து
வயது போனதை
பறை சாற்றும்
மரபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களூரில்
இன்றும் உண்டு.
ஒரு நாள் இவர்
இறையடி யெய்த
போர்க் கோழி
போக்காளியானார்
எனப் பெரு மூச்சுவிடும்
மரபு
எங்களூரில்
இன்றும் உண்டு.

மச்சான்
கேட்டுக்கிடக்கும் மாப்பிள்ளை
அவக
வீட்டுக்காரர்
தம்பிரவாப்பா
மூத்தவாப்பா
எங்கட மனுசன்
இறப் பெய்த
போக்காளி
யாகிப் போனார்
இந்த மரபு
எங்களூரில்
இன்றும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாட்டிற்கு பஞ்சம்
## எங்கள் பரம்பரைக்கே கிடையாது

ஆண்கள்
சந்தோச வேளைகளில்
பொல்லடிப்பார்கள்
அப்போது பாடுவது
பொல்லடிப் பாட்டு.

பெண்கள்
கலியாணத்தின் போது
மருதோன்றி இட்டு
சந்தோசத்தில் பாடும் பாட்டு
குரவைப் பாட்டு.

வலை இழுத்தால்
அம்பாப் பாட்டு.

அருவி வெட்ட
அதற்கொரு பாட்டு.

சூடு மிதிக்க
சூட்டடிப்பாட்டு.

ஏசுவதும் பாட்டால்
அதற்குப் பெயர் பள்ளுப் பாட்டு.

பன்றி வெட்டி
பாடையிலே போயிடுவாய்
இதற்குப் பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறப்பாட்டு.
முக்காட்டிற்குள்
முழுமதியா
சுண்டி இழுக்கும்
சுறுமாக் கண்ணி
இது
காதல் பாட்டு.

அம் மென்றாலும் பாட்டு
அம் மியரைத்தாலும் பாட்டு
ஆ! என்று கொட்டாவி
விட்டாலும் பாட்டு
பாட்டுற்கு பஞ்சம்
எங்கள்
பரம்பரைக்கே கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்கில் பெண்கள் குழந்தைகளை அழைக்கும் அழகு

ஈழத்தின்
தென்கிழக்கு
இயற்கை அழகோடு
குழந்தைகளை
அழைக்கும் அழகு
ஆ ! அற்புதம்.

பொத்துவில்
பெண்கள்
குழந்தைகளை
வாங்கராசா
என
அன்போடு
அழைத்து மகிழ்வர்.

அக்கரைப்பற்றில்
வா மணி.

அட்டாளைச்சேனை
அதனருகே
பாலமுனை, ஒலுவில்
என
மூன்று ஊர்களிலும்
வாச்சி
என்றே அழைப்பர்.
நிந்தவூரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாச்சி என்றும்
வா மைனா என்றும்
அழைக்கும் வழக்குண்டு.

இறக்காமம்
வரிப்பத்தாஞ்சேனை
இரண்டு ஊர்களிலும்
வா தங்கம்
என
தங்கமாய் அழைத்து மகிழ்வர்.

சம்மாந்துறையின் அழைப்பு
வா மன
என்றிருக்கும்.

நற்பட்டிமுனையிலே
பொத்துவிலைப் போல
வாராசா
என்றே அழைப்பர்

மருதூரில்
வா கிளி.

கல்முனை குடியில்
வா அழகு.

மருதமுனையில்
வா வாப்பா
வா தங்கம்
என்ற சொற்களாலும்
பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளை
அழைத்து மகிழ்வர்
தென்கிழக்கின்
எட்டுத்திக்கும்
“கா”
என்ற அசைக்கு
பஞ்சமேயில்லை.
புள்ளலெக்கா
புள்ளலெக்கா
உண்ட புரிஷன்
எங்கே போனதுகா
என ஒருத்தி
மற்றவளோ
கல்லூட்டுத் திண்ணையிலே
கதைத்திருக்கப் போனதுகா
எனக் கூறி
இருவருமே இன்புறுவர்
இதனை மொழி ஆய்வாளர்கள்
தென் கிழக்கில்
பெண்கள் வாயிலும் கா
ஆண்கள் தோழிலும் கா
எனக் கூறி மகிழ்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி IV

## மீண்டும் ஆழ்கடல் சேர்ந்த அலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளீடு

❖ நீ கவிஞனாக.

❖ ஒன்றில் இருந்து ஒன்று.

❖ கடற்கன்னி உனையெண்ணி.

❖ பயமும் பக்தியும்.

❖ வெளிச்சத்திற்கே அது வெளிச்சம்.

❖ படைப்பின் சூக்குமம்.

❖ தேடவே தேவையில்லை.

❖ நீரும் நெருப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ கவிஞனாக

நெருப்பு
காய்ந்து கல்லானது.
அது
தேரைக்கு
கற்பப்பையானது.
அதற்கு நீர் தேவை.
அது
நெருப்புக்குள்ளிருந்தது.
மழை மேகங்கள்
மோதும் போது
நெருப்பு
கனலாய்ப் பறந்தது.

இதனை
இப்படியும் கூறலாம்.
கல்லினுள்
பஞ்சபூதம்
உன்னுள்ளும் அது.
அதுவே கவிதை.

ஆரம்பத்தில்
வாலறிவனை
கல்லாகக் கண்டவனை
மெச்ச வேண்டும்
அதுசமயம் அது சரி.

நீ
கவிஞனாக
முதலில்
நெருப்பாயிரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றில் இருந்து ஒன்று

குற்றினால் அரிசி.
இடித்தால் மாவு.
ஆக்கினால் சோறு.
அவித்தால் பிட்டு.
இவை உடலுக்கு.

வெங்காயம் சுக்காக
அகம் மாறும் சீராக.
சீரகம்
இது உயிருக்கு.

முடை, கடன்
இரண்டும் இடுக்கண்,
இல்லையெனில்
சூடு தணியாது
மதி பெற்ற கடனே ஒளி.

இடுக்கண்ணில்
வந்த மாற்றம்,
தவத்தால் வந்த சித்தி.
நாணயத்தின் இரு பக்கம் போல.

பயமே பக்தி.
பக்தியே பயம்.
இரண்டும் ஒன்றல்ல
ஒன்றில் இருந்து ஒன்று.
இது அதுவாக
எல்லாம் ஒன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற் கன்னி
## உனையெண்ணி

உன்
நினைவு, உணர்வு
இரண்டையும்
ஆழ் மனத்திலிருந்து
வெளியே எடுத்து,
மொழிச் சலவை செய்து
கலைந்து விடாமல்
ஆன்மீகச் சாக்கிலிட்டு,
ஆழ் கடல் போய்ச்சேரும்
அலையோடு சேர்த்துவிட்டேன்.

கடல் ஆழத்தை
அளவிட முடியாது.
உனக்குமிது பொருந்தும்.

உண்மை, பொய்,
நீதி, அநீதி,
கடற்கன்னி
நிரந்தரமற்றது.
கடலிலும், தரையிலும்
யுகம் முடியும் வரை
உலா வரும் இவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயமும் பக்தியும்

பல்லிக் குஞ்சு,
முட்டையில் இருந்து,
வெளி வந்து,
ஒரு நாள் கூட ஆகவே இல்லை.
உச்சி வேளை,
கூரை நிழலில்,
மெல்ல மெல்ல,
ஐந்து அடி,
ஊர்ந்து சென்றதும்,
நிழல் முடிந்தது.
அகோர சூடு,
போன வழியே
ஓடி வந்தது பல்லி.

பய உணர்வு
கூடவே பிறந்ததா?
சூட்டில் ஒளிந்துள்ள
ஒளியை எண்ணிய
பக்தியா?
மரஞ் செடி கொடி
வளர்ச்சிக்கு
ஒளி மூலமா?
அதனால் பக்தியா?
மூலத்தை தேடுவதே
பக்தியா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிச்சத்திற்கே
## அது வெளிச்சம்

நேற்று மழை,
இன்றில்லை.
காளான்கள்
ஏன் இன்று குடை பிடித்து நிற்கிறார்கள்?
மழை கண்ட
சந்தோசத் தொடரா?
எதிர் பார்ப்பா?
இரண்டுமற்ற
கறிக்குதவும்
மனப்பாங்கா?

சூக்குமம்
எமக்குப் புரிவதில்லை
காரணம்
நாம் இருட்டில்.
வெளிச்சத்திற்கே
அது
வெளிச்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்பின் சூக்குமம்

பெருவெடிப்பு (big bang)
பால் வெளிகள் பல
அவற்றுள்
எமது பால் வெளியில்
பூமித்தாய்.
சிறு வெடிப்பில் இருந்து
மனித உயிர்கள்.
அழுது கொண்டே வந்தன.
வாயுள் வைத்ததும்
அழுவதில்லை.
இறக்கும் வரை
பாலுணர்வு.
இல்லையேல்
பெருக்கமில்லை.
கட்டிப்பிடித்தலும்,
கசக்கிப் பார்த்தலும்
தேவை,
இன்னொரு தேவைக்கு.
வேறு வேறு நோக்கங்கள்
பெரு வெடிப்பில்.
அவனும்
சிறு வெடிப்பில் இவனும்
படைப்பின் சூக்குமம்.
வெடிப்பில் இருந்தே பிறக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேடவே தேவையில்லை

நீ
அவனைத் தேடாதே,
எங்கும் நிறைந்தவனை
எங்கே தேடுவது.

அவனை
இல்லையென்பவன்
உள்ளும் இருப்பான்.

அவனுக்கு
கோயில் குளம்,
வீடு வாசல்,
சேர்ச் மொஸ்க்
விகாரையென,
வித்தியாசம் தெரியா.
அதனால் தான் அவன்
அவனாக இருக்கிறான்

அவனை
பேதப்பட்டவர்கள்
பேதப்பட்ட இடத்தில்
இருக்க
விடமாட்டார்கள்.
பேதமில்லாதவன்
அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா இடத்திலும் அவன்.
இறைக்கு
99 நாமம்
எல்லோரும்
உரிமையோடழைக்கவே
இப்படி.
ஏகன்
உருவமில்லாதிருப்பதுவும்
ஏகமும் வணங்கவே.
அதனால் அவனை
தேடவே
தேவையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரும் நெருப்பும்

நீருக்கு நெருப்பு
ஏதோ செய்தது.
அது
அட்டூழியமா?

நீர்
கொதித்தெழுந்து
ஆவியாகி
ஆகாயம் சேர்ந்தும்
நெருப்பு
பயப்படவேயில்லை.

நீர்
கண்ணீர் விட்டழுதது
அது
நெருப்பில் பட்டதும்
அடங்கி
கரியானது.

நீர். நெருப்பு,
ஆவி, ஆகாயம்,
கல், கரி
பஞ்சபூதத்தின்
பல நிலைகளா?
ஒளியின் பிரதியா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி V

# ஆவியாகிச் சென்ற அலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளீடு

❖ அறம்புறம் எல்லாம்
அடிமைகள் உன்னிடத்தில்

❖ அல்லாஹ் எழுதிய
அந்தக் கவிதை

❖ பன்னீர்க் கூதலும்
சந்தனப் போர்வையும்

❖ தாயும்
தனயர்களும்

❖ கண்ணீர்த் துளிகளை
பன்னீர் துளிகளாக்கினோம்

❖ கவிக்கோவை அழைத்தான்
வான்கோ

❖ தலைவரின் தாய்
எனக்கும் தாயே

❖ பிரிதலிலும்
பெறுண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறம்புறம் எல்லாம்
## அடிமைகள் உன்னிடத்தில்

அறைக்கு நான் நாளை வந்து
சந்திக்க விழைந்தபோது
இருப்பனோ தெரியாதன்ப
எதற்கும் நீர் வந்து பாரும்
என்று நீ சொன்ன போது
நினைத்தேனா இதனை என்னே?
நீழ் துயில் கொள்வதற்கா
நீ இது உரைத்தாய் சொல்லு.

அகம்புறம் நானூறெல்லாம்
அடிமைகள் உன்னிடத்தில்
கலாநிதி சிங்கி என்றால்
கலங்கிடும் கவிதையும்
காப்பியத் தோணியேறி
கரை பல கண்ட உன்னை
கொடுமைகள் செய்யும் கொள்ளி
கொண்டதே ஐயோ ! இன்று

தேடியே எந்தன் இல்லம்
திரிந்து நீ வந்து சேர்ந்து
கூடியே கதைத்திருந்து
கூர்மையாம் நூல்கள் தந்து
நாடியே கல்வி சொன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகன் நீயோ இன்று
ஓடியே போனதெங்கே
உன்னை நான் காண்பதெற்போ.

அங்கிகள் என்ன கோலம்
அழகாக உடுத்தச் சொன்னால்
சிங்கிக்கி அறிவே தாகம்
சிங்காரம் அல்ல என்பாய்
தங்கியே இருந்தேன் உன்னில்
தவிக்கிறேன் எங்கே போவேன்
வங்கியே போனதய்யோ
தமிழ் வளருமே அங்கு முன்னால்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்லாஹ் எழுதிய அந்தக் கவிதை

ஆ !
அருமை அற்புதம்
எத்தனை அழகு
அல்லாஹ் எழுதிய
அந்தக் கவிதை
புதுமை மலிந்த
புதுக்கவிதை.

மீன் சினை போன்ற
வித்தொன்றுள்ளே
ஆல விருச்சம்
ஆமினா அடியில்
ஞான விருச்சம்.
அல்லாஹ் எழுதிய
அந்தக் கவிதை
புதுமை மலிந்த
புதுக்கவிதை.

அகமது தெளிந்து (அகம் - அது)
ஜெகமது ஒளிர (ஜெகம் - அது)
முகம்மது வளியாய் (முகம் - அது)
அல்லாஹ் எழுதிய
அந்தக் கவிதை
புதுமை மலிந்த
புதுக்கவிதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நாங்கள்
புதுக்கவிதை கண்டு
புலம்புதல் போல
அன்று
மக்கா மக்கள்
புலம்பினர்
மரபு ஒழிந்தது
எங்கள் ஓர்மை
எங்கோ போனது
ஆயிரம் கடவுளும்
அந்தோ அழிந்தது
என்றே அவர்கள்
இரைந்து எழுந்து
ஆயுதம் தாங்கினர்
அழிப்பதெற்கென்றே.
புதுக்கவிதை
அழிந்ததா ?
இல்லை
அல்லாஹ் எழுதிய
அந்தக்கவிதை
புதுமை மலிந்த
புதுக்கவிதை.

ஒன்று பத்து
நூறு ஆயிரம்
இலட்சம் என்று
எத்தனை நபிமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்கவியாக
இறைவன் எழுதினான்
அத்தனை கவிக்கும்
முத்தாப்பு முகம்மது
அல்லாஹ் எழுதிய
அந்தக் கவிதை
புதுமை மலிந்த
புதுக்கவிதை.

மருந்தும் விருந்தும்
மாண்பினில் ஒன்றே
இருந்தும் என்ன
ஒதுக்குவர் மருந்தை
தேவையுள்ளோர்
மருந்தை எடுத்து
விருந்தாய் உண்பர்
மக்கா மதினா
பொருந்தும்
படிமம்
அல்லாஹ் எழுதிய
அந்தக் கவிதை
புதுமை மலிந்த
புதுக் கவிதை.

அன்னை அடியில்
சொர்க்கம் என்ற
அடி (இல் - இன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை கோடி
இன் கருவுண்டு
அல்லாஹ் எழுதிய
அந்தக் கவிதை
புதுமை மலிந்த
புதுக் கவிதை.

'ஜிஹாத்' என்ற
தியாக வாழ்வு
இக்ரஃ என்னும்
அறிவுக்கீடா
இல்லை இல்லை
பேனா மையே
பெரிது பெரிது
என்ற கூற்றில்
எத்தனை நூர் (ஒளி)
நுட்பம் உண்டு
நூர் நூறே
நூறும் ஒன்றே
என்று கூறும்
அல்லாஹ் எழுதிய
அந்தக்கவிதை
புதுமை மலிந்த
புதுக்கவிதை.

அடுத்தவன் பசிக்க
புசித்தலாகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கவிதை அடியினை
இன்று
காலமாக்ஸ் ஏங்கல்ஸ்
கருத்தில் கொண்டு
மூலதனத்தின்
முடிச்சாய் ஆக்கினர்
சோவியத் என்ற
சொல்லின் உள்ளே
சபியத் என்ற
சொல்லின் பெருளாம்
உற்று நோக்கின்
உண்மை தெரியும்
அல்லாஹ் எழுதிய
அந்தக் கவிதை
புதுமை மலிந்த
புதுக்கவிதை.

பொறுமை - பூமி
அருமை - முகம்மது
படிமம் - இரண்டும்
ஓதிடும் - ஒன்றே
இறையும் மறையும்
ஒன்றினுள் ஒன்று
மறையும்
கவிதை
புரிந்ததா? (க) விதை
மீண்டும் ஒரு முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மை மறுமை
இரண்டிலும்
ஒருமை இறைவன்
ஓதிடில் அவனது
அகமது (அகம் - அது)
அனைத்திலும் உண்டு
புரிந்ததா ? சொர்க்கம்
அல்லாஹ் எழுதிய
அந்தக் கவிதை
புதுமை மலிந்த
புதுக்கவிதை.

நான் மறை வழியும்
மீன் சினை விதையும்
ஆமினா அடியும்
ஓதின
ஒருவன் அவனென
இதனை
இப்படியும் ஓதலாம்
எல்லாமே அவனென்று
அவன் எழுதிய
இறுதிக் கவிதை
அதுவொரு
புதுக்கவிதை
ஆ !
அருமை அற்புதம்
எத்தனை அழகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னீர் கூதலும் சந்தனப் போர்வையும்

பென்னம் பெரிய
கருங்கல் ஒன்று
உசும்ப மறுத்து
கிடத்தல் போல
எந்தன் மனத்தில்
அந்த நிகழ்வு
அசையாதுளதே.

எழுபத்தொன்பது
சித்திரை மாதம்
திங்கள் இரவு
திகதி பத்தாம்.

அந்த இரவில்
எங்கள் அன்னை
அழுத வாறு
அரட்டிய போது
தந்தை பிரிந்த
செய்தி தெரிந்தது.

அற்றைப் பொழுது
தந்தை உடலோ
கொதியாய் கொதித்தது
காய்ச்சல் கடுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றே எண்ணி
சந்தனம் அரைத்து
உடலில் பூசி
போர்வையாக்கினோம்.
பன்னீர் கொஞ்சம்
பருக்கிப் பார்த்தோம்.
அனைத்தையும் உதறி
அகன்றதே அவ்வுயிர்
மணக்கும் சந்தனம்
பன்னீர் வாசம்
அகலாதுளதே.

ஆ
என்னருமைத் தந்தையே,
எப்படி எங்களை
விட்டுப் பிரிய
மனமும் வந்ததோ ?

நான்
இளைஞனாகி
ஆசான் ஆன போது
எனக்கு நீங்கள்
ஆசானாகி
எரிந்தாலும் கயிறு
முறுக்கு எரியாது
இருப்பது போல
இருத்தல் ஏற்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்புகட்டி
வாழ்ந்தும் காட்டியதை
உடங்கள் தோழின்
பட்டுச் சால்வை
பகரும் சாட்சியம்.

எங்கள் தந்தை
எங்களை காக்க
எத்தனை இரவுகள்
கண் விழித்திருந்தார்
ஓர் இரவாயினும்
அப்படி இருக்க
எங்களால் முடிந்ததா ?

தந்தையே
நான்
சிறுவனாய் இருந்த போது
என்னை நீங்கள்
நண்பர்கள் வீட்டிற்கு
அழைத்துச் சென்று
புத்தகம் தந்து
வாசிக்கச் சொல்லி
இப்படி உன் மகன்
வாசிப்பானோ?
எப்படி என் மகன்
என்றே கேட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைப்பட்ட
அந்த நாளை
எண்ணி அழுகிறேன்.
இந்த றோட்டு
உங்கள் வாப்பா
சேவையின் சின்னம்
அதன் பின் யாரும்
இப்படிச் செய்ய
எண்ணியதே இல்லை.
இந்த மதகு
உங்கள் வாப்பா
காலக்கட்டு
வெள்ள காலம்
மட்டும் நினைப்பர்
என்று ஊரார்
உரைக்கும் போது
உள்ளம் குளிரும்
தந்தை பெயரால்
பெருமை கொண்ட
தனையர் நாங்கள்.

அன்று
உங்கள் ஜனாசா
ஊர்வலமாய்ச் சென்ற போது
கலந்து கொண்டோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியம் கூறினர்
நீங்கள்
சமூக சேவை
பிரியர் என்றே.
எங்கள்
கண்ணீர் வெள்ளமும்
மக்கள் வெள்ளமும்
கலந்த
வெள்ளக் காட்டில்
உங்கள் ஜனாசா
வெள்ளை றொசாவாய்
மெல்ல மெல்ல
மிதந்து சென்றதே
ஆ !
என் அருமைத் தந்தையே
எப்படி எங்களை
விட்டுப் பிரிய
மனமும் வந்ததோ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயும் தனையர்களும்

'பத்துக் குழந்தைகளை
ஒரு தாய் காப்பாற்றுவாள்
பத்துக் குழந்தைகளும் சேர்ந்து
ஒரு தாயைக் காப்பாற்ற மாட்டார்கள்'

ஜனாசா அடக்கத்தை
நடத்தி முடித்து
வீடு நோக்கி வந்த போது
மேற் சொன்ன
காண்டேகர் வார்த்தை
சம்மட்டி என
தாக்கியது எந்தனையே.

மூத்தவர்
தாய்கு ஏதும் கொடுத்திருப்பார்
என நினைத்து தம்பிமாரும்
தம்பிமார் கொடுத்திருப்பர்
என நினைத்து நானும்
ஆண்கள் இருக்க
நமக்கேன் அழுட்டல்
எனத் தங்கைகளும்
தாய்க்கேதும்
கொடுக்காதிருந்தது
விசாரித்த போதுதான்
தெரிய வந்தது
இப்படி நடந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை தடவை
அப்படி இருந்தும்
குறை கூறா
தாய்மை உணர்வை
இன்று உணர்கிறேன்.

பொறுமையில்
பூமா தேவி
தாயே நீங்கள்.

எண்பது வயதென
சொல்லவே முடியா
அவக்கென
கவலையா கக்கிசமா
பத்துப் பிள்ளைகள்
ஒன்றில்லாட்டியொன்று
பசிக்கே இடமில்லை
பக்கத்து வீட்டு
பாத்துமா சொன்னது
உண்மையா ?
பசித்தும் நீங்கள்
பகரவில்லையா ?
இனி நினைத்து என்ன செய்ய
தண்ணீர் பந்தல்
தாயே நீங்கள்

விட்டுப் பிரிந்தும்
எங்களை விட்டுப் பிரியா
உங்களின்
தையாலப் பெட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனுள்ளே
நல்ல தங்காள்
சேவல் பாட்டு
சைத்துன் கிஸ்ஸா
நூறு மசாலா
அரபுத் தமிழ் தொழுகை அடவு
அதபு மாலை
அவைகளோடு நாங்களும்
உங்கள் சொத்து
வாசித்து
வாசிக்க பழக்கிய
தரமான நூலகம்
தாயே நீங்கள்.

மருந்திற்கும் செலவு
மக்களுக்கு கொடுக்காது
திடீரென பயணம் வைத்து
இறையடி சேர்ந்து விட்ட
அரிதான மலை வாழை
அல்லவோ
தாயே நீங்கள்.

தாயின் காலடி
எங்கள் சொர்க்கம்
இறையடி
உங்கள் சொர்க்கம்
என நினைத்து
இருகரம் ஏந்தினோம்
இறையருள் வேண்டியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் துளிகளை பன்னீர் துளிகளாக்கினோம்

நேற்று
ஊரும் உலகமும்
ஒரு கணம்
ஸ்தம்பிதமாயின
மக்கள்
உணர்வற்றுக் கிடந்தனர்.
வானொலி, ரீவி, மின்சாரம்
எல்லாமே இயங்க மறுத்தன.
இவைகளோடு நீங்கள்
நெருங்கிப் பழகியவர்
என்பதனாலா ?
அவைகளுக்கும் துக்கம்
தொண்டையை அடைத்ததுவா.
எதனையும் நம்ப முடியாத
ஒரு நிலை மக்களுக்கு.
கேள்விப்பட்ட செய்தி
வதந்தியாகிவிடாதாயென
அங்கலாய்த்தோம்
அதனால்
இறைவனிடம்
இருகரமேந்தி
இறைஞ்சி நின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாமல் போய்விட்டதே.
முஸ்லிம் காங்கிரசின்
மொட்டுக்களே!
போராளிகளே!!
என நீங்கள்
எங்களை
அழைக்கும் ஒலி
அலையலையாய்
எங்கள் காதுகளில்
முட்டி மோதிச் செல்கின்றதே
அதனால் நாங்கள்
கேள்விப்பட்ட செய்தி
வதந்தியாகி விடாதா என
இரு கரமேந்தி
இறைஞ்சி நின்றோம்
முடியாமல் போய்விட்டதே.

கிழக்கில் உதயமாகும்
பூரணச் சந்திரன்
உங்கள் முகமா?
அது கண்ணெதிரே
காட்சி தருகிறதே,
அதனால்
நாங்கள் கேள்விப்பட்ட செய்தி
வதந்தியாகி விடாதாயென
இறைவனிடம்
இரு கரமேந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைஞ்சி நின்றோம்
முடியாது போய்விட்டதே.
நீங்கள் சொன்னது
எதுவும் பொய்த்ததில்லை
"கழுவிக் குளிப்பாட்டி
கபனிடும் வேலையை
உங்களுக்கு தந்து
தொந்தரவு செய்யமாட்டேன்" என
உம்ராவுக்கு போய் வந்து
உறுதி மொழி
கூறினீர்கள்
அதைக் கூட
மெய்யாக்கி
எங்களை
அழுது புலம்ப விட்டீர்கள்
எதையும் தாங்கும்
இதயம் எங்களுக்கு
ஆனால் உங்களின்
இறப்புச் செய்தியை
எங்களால்
தாங்க முடியவில்லையே
அதனால்தான்
நாங்கள்
கேள்விப்பட்ட செய்தி
வதந்தியாகிவிட
இறைவனிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருகரமேந்தி
இறைஞ்சி நின்றோம்
முடியாது போய்விட்டதே.
அரசியல் சாணக்கியன் நீங்கள்
அதனால்
தென் கிழக்கின்
உதய தாரகையாகி
நாற்றிசையும் பிரகாசித்தீர்கள்
கவிஞருக்கெல்லாம்
கவிஞர் திலகம் நீங்கள்
அதனால்
உங்களைப்பாடாத
கவிஞனே இல்லை எனலாம்
நீங்கள்
காட்டியதெல்லாம்
புதிய வெளிச்சங்கள்
அதனால்
உங்கள்
காலடிக்கு வராத
அரசியல் வாதிகளே
இல்லை எனலாம்.
வாதத் திறனில்
உங்களுக்கு நிகர்
நீங்களே தான்
அதனாற்தான்
உங்களோடு விவாதித்த
எவரும் வென்றதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனைக்கும் மேலாக
நீங்கள் நல்லதொரு மனிதர்
அதனாற்தான்
மயோன் முஸ்தபா வீட்டிலும்
வெள்ளைக் கொடி பறக்கிறது.
அக்கரைப்பற்றில்
சேகு இஸ்ஸதீன்
கட்சி பேதமின்றி
கடைகளைப் பூட்ட
உத்தவிட்டார்.

எல்லோர் மனங்களையும்
கொள்கை கொண்ட
அஷ்ரப் 'பூ'
அகாலமாய்
உதிர்வதைப் பார்த்து
துடி துடிக்கும்
மக்களின்
கண்ணீர் துளிகளை
பண்ணீர் துளிகளாக்கினோம்.
உங்களின் ஆத்மா
எங்களோடுதான் இருக்கிறது
உங்களின்
ஆத்மா சாந்திக்காய்
எல்லோரும்
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிக்கோவை அழைத்தான்

## வான்கோ

உன் இறப்புச் செய்தி
அகலாத உறவின் நினைவு
இரண்டிற்குமிடையே
மல்லாடும் மருதூரரார்
எழுதும்
இரங்கற்கவிதையிது
இறைவன்
"பாலைவனத்திற்கென்றே
ஒட்டகத்தைப் படைத்தான்"
அவன்
எனக்கென்றே
என் மனைவியைப் படைத்தான்.
என
உன் மனைவி இறந்த போது
நீ
இரங்கல் கவி படைத்த நிகழ்வும்.
கோவை மகாநாட்டிற்கு
நான் வரமாட்டேன்
எனக் கேள்விப்பட்டதும்
நீ
பேராசிரியர் சமதை அழைத்து
மணிப்புலவர்
எதைக் கேட்டாலும் கொடு
அவரை இங்கு எடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என விடுத்த
கட்டளை நிகழ்வும்.
எமது
முதல் சந்திப்பு
நிகழ்ந்தது 1978 இல்
இ ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
முஸ்லிம் நிகழ்ச்சி
கவியரங்கு.
கலைவாதியோடு
நானும் நுஃமானும்
எனைப்பார்த்து
அழகான நிறம்
ஈழத்து எம்ஜிஆரா?
எனக்கேட்ட நிகழ்வும்,
அதன் பின்
நீ
அகலக்கால் வைத்து
அழகாக நடந்த நடையும்,
வெண்ணிற ஆடையும்
உன்னோடு இணைந்த
புதுக்கவிதைப் படையும்
நான்
கண்டு மகிழ்ந்த நிகழ்வும்,
என்னைச்சுற்றி
இறுக்கமாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்

இறப்புச் செய்தியோடு கலந்து

என்னை திக்கு முக்காட வைத்தது.

ஹக்கலப் பூந்தோட்டத்தில்

நெருப்பிட்டது போன்ற உணர்வு.

இருந்தாலும்

நோன்பு காலம்

உன் இறப்பு நிகழ்ந்தது

என் மனதை அமைதியாக்கியது.

இறைவா!

என்

ஆத்த நண்பனின்

ஆத்மா சாந்திக்காய்

இரு கரமேந்தி

இறைஞ்சினேன்

ஏற்றுக் கொள்

அவர்

ஆத்ம சாந்திக்கு

அருள் செய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவரின் தாய் எனக்கும் தாயே

ஹக்கீமுக்கு பெற்ற தாய்
எனக்கு நீங்கள்
இலக்கியத்தாய்.
என் தாய்
இறையடி சேர்ந்த பின்
ஒரு நாள்
உங்களைச் சந்திக்க வந்தேன்
என் தாயை
சந்தித்த உணர்வு எனக்கு.
நிறத்திலும் குணத்திலும்
உருவ அமைப்பிலும்
குரல் வளத்திலும்
என் தாயேதான் நீங்கள்.
அதனால் உங்களை
என்
இலக்கியத் தாயாய்
ஏற்றுக் கொண்டேன்.
முஸ்லிம் காங்கிரஸ்
மூத்த தலைவரின் தாய்
நீங்கள், என் தாய்
மூவரும்
ஒரு தாய்பெற்ற
பிள்ளைகள் போன்ற
தோற்றப்பாடு
இதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல இடத்தில்
பதிவு செய்துள்ளேன்.
உங்கள் கணவரால்
கோர்வை செய்த
தாலாட்டுப் பாடலை
உங்கள் பிள்ளைகளை
தொட்டிலில் இட்டு
பாடியதை
மீண்டும் எனக்கு
பாடிக்காட்டியது
இன்றும் என் காதுகளில்
இனிதே கேட்கிறது.
எங்களை எல்லாம்
விட்டுப் பிரிந்து
இறையடி சேர்ந்த
இலக்கியத் தாயே
உங்கள் தகப்பனார்
பாடி அருளிய
பத்ர் மாலையை
உங்கள் குரலால்
இனி
எப்போது கேட்போம்.
தாயே
நீங்கள் சொர்க்கத்திலும்
நன்மாராயம் பெற்றவராக
இனிதே வாழ
இறைவனை
இறைஞ்சிகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிதலிலும் பேறுண்டு

இமைகள் பிரிதல்
பார்வைக்கு உதவ
இதழ்கள் பிரிதல்
பேச்சுக்கு உதவ
தாய்ப்பால் பிரிதல்
குழந்தைக்கு உதவ
மும்தாஜ் பிரியவே
தாஜ்மஹால் உருவானது.
தேசங்கள் பிரிவது
புதிய தேசங்கள் உருவாகவே.

இதற்கு நல் உதாரணம்
பாகிஸ்தான் - பங்காளதேஸ்
நீ
என்னை விட்டுப் பிரிந்த பின்புதான்
"ஞானம்"என்னிடம் வந்தது.
எனவேதான்
பிரிதலில் பேறுண்டு
என்ற முடிவுண்டு
என்னிடம்.

உன் பிரிவு
தற்காலிகமானதே
என்றாலும் பிரிவிலே
பேறுண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] PUBLIC LIB[illegible]
06 JUN 2008
[illegible]

வானத்தில் நிலவு
வண்ண மலர்
ஏனத்தில் சாரம்
இன்னமுது
மோனத்தில் கனவு
முகிழாது
ஞானத்தின் ஒளியே
அதுவாகும்

நன்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1) பன்னீர் வாசம் பரவுகிறது
(சிறுகதைத் தொகுதி) - 1979

2) மறக்கமுடியாத என் இலக்கிய நினைவுகள்
(கட்டுரைகள்) - 1990

3) இஸ்லாத்தைப் பற்றி இதர மதத்தவர்கள்
(தொகுப்பு) - 1992

4) பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்
(கவிதைகள்) - 1995

5) மத்திய கிழக்கிலிருந்து மட்டக்களப்பு வரை
(ஆய்வு) - 1995

6) இளமையின் இரகசியமும் நீடித்த ஆயுளும்
(அறிவியல்) - 1996

7) நீரிழிவு வியாதியும் அதுபற்றிய சில அனுபவக் குறிப்புகளும்
(அறிவியல்) - 1997

8) தென்கிழக்கு முஸ்லிங்களின் பூர்வீக வரலாறு
(ஆய்வு) - 2001

9) வேர்
(தனிமனித வரலாறு) - 2[illegible]

10) சர்வ மதங்களிலும் நோன்பு
(அறிவியல்) - 2[illegible]

11) தென்கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் நாட்டாரியல்
(ஆய்வு) - 2[illegible]

12) மூடமறுக்கும் விழிகளும் துடிக்கும் இதயமும்
(கவிதைகள்) - 2009

13) கூடுகட்டத் தெரியாத குயில்கள்
(சிறுகதைத் தொகுப்பு) - 2009

14) போருக்கப்பால் மனித நேயம் தேடல்
(சிற்றுரைகள்) - 2009

15) தமிழ் மொழியின் பூர்வீக வரலாறு
செம்மொழி அந்தஸ்து சீர்திருத்தங்கள் (ஆய்வு) - 2012

16) இதுவொரு தங்க நூல்
(அறிவியல்) - 2014

17) ராமர் இந்தியாவில் பிறக்கவில்லை - 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org